# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை—600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை—600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

******

முறையீட்டு மனு எண்: 065/2019/மா
ஆணை நாள்: 3–03–2020

திரு. M. அரவிந்த் பாலாஜி,
மதுரை. --- முறையீட்டு மனுதாரர்

திரு. S. அரசு,
நகரப் பொறியாளர்,
மதுரை மாநகராட்சி. --- எதிர் மனுதாரர்

மதுரை, சுந்தரராஜபுரம், புதிய ரைஸ் மில் ரோடு, 2-வது தெரு, எண்.1 என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. அரவிந்த் பாலாஜி என்பவரது 1.10.2019 நாளிட்ட மனு 1.10.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு முறையீட்டு மனு எண்.065/மா/2019 என எண்ணிடப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அறிக்கை பெறப்பட்டு, கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

**ஆணை:**

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தான் பாலாஜி பிளாஸ்டிக் என்ற நிறுவனம் நடத்தி வருவதாகவும், குறு, சிறு தொழில் பதிவு சான்று பெற்றவர்களுக்கு, அரசு பணிகளை மேற்கொள்ளுவதற்காக அறிவிக்கப்படும் ஒப்பந்தபுள்ளிகளில் 20 சதவீதம் வழங்கவேண்டும் என்றும், முன்வைப்பு தொகை மற்றும் பதிவு கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்றும், ஆனால் மதுரை மாநகராட்சியில், குறு, சிறு நிறுவனங்கள் ஒப்பந்த பணிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை என்றும், வைப்புத் தொகை செலுத்துவதிலிருந்தும் விலக்கு அளிப்பதில்லை என்றும் தெரிவித்து முறையீடு செய்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் 26.11.2019 அன்று விசாரணையின் போது அளித்த வாக்குமூலத்தில், தான் பாலாஜி பிளாஸ்டிக் என்ற பெயரில், பழைய கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்துதல், கட்டுமானங்கள் மற்றும் அதன் தொடர்பான பணிகளை செய்து வருவதாகவும், குறு சிறு தொழில் நிறுவனத்தில் பதிவு செய்துள்ளதாகவும், இவ்வாறு பதிவு செய்துள்ளவர்களுக்கு அரசு ஒப்பந்தபுள்ளிகளில் 20 சதவீதம் வழங்கவேண்டும் என்றும், வைப்புத்தொகை செலுத்துவதிலிருந்தும் விலக்களிக்க வேண்டும் என்றும், ஆனால் மதுரை மாநகராட்சி அவ்வாறு வழங்குவதில்லை என்றும், மதுரை மாநகராட்சி மாட்டுதாவணி பேருந்து நிலையத்தின் பராமரிப்பு பணிகள் 8 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 14.5.2018–ல் டெண்டர் மூலம் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது என்றும், 24.5.2018 இறுதி நாளன்று ஒப்பந்தபுள்ளி சமர்ப்பித்ததாகவும், மாநகராட்சி தனக்கு அனுப்பியிருந்த கடிதத்தில், தான் ஒப்பந்ததாரராக பதிவு செய்யவில்லை என்றும், ஒப்பந்ததாரராக பதிவு செய்ய உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்ட நிலையில் டெண்டரில் கலந்து கொண்டுள்ளீர் என்றும், இதுவரை ஆவணங்களை சமர்ப்பிக்காத நிலையில் 3 தினங்களில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் ஒப்பந்தபுள்ளி ரத்து செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது என்றும், ஆனால் தான் அந்த கடிதத்திற்கு பதில் ஏதும் எழுத்துபூர்வமாக சமர்ப்பிக்கவில்லை என்றும், மேலும் மாநகராட்சிக்கு பணியாளர்களை வெளியில் இருந்து வழங்க ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது என்றும், இந்த டெண்டரில் கலந்து கொள்ள ரூ.38 லட்சம் தொகையினை வங்கி வரைவாக செலுத்த கடிதம் வந்தது என்றும், அதற்கும் தான் எழுத்துபூர்வமான பதில் அனுப்பப்படவில்லை என்றும் குறு சிறு தொழில்கள் செய்பவர்களுக்கு உரிய சலுகைகள் கிடைக்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

மதுரை மாநகராட்சி நகர பொறியாளர் தனது 25.2.2020 நாளிட்ட அறிக்கையில் மதுரை மாநகராட்சி, பொறியியல் பிரிவில் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் ஒப்பந்த விதிகளின்படியும் மாநகராட்சியில் பதிவுபெற்ற ஒப்பந்ததாரர்கள் மூலமும் பணிகள் முறையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும், திரு. அரவிந்த் பாலாஜி தன் மீதும் இவ்வலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் மீதும் பொய் புகார்களை தெரிவித்துள்ளார் என்றும் மேலும், திரு. அரவிந்த் பாலாஜிக்கு மாநகராட்சியில் ஒப்பந்ததாராக பதிவு செய்து பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தி மாநகராட்சி சார்பில் கடிதம் அனுப்பப்பட்டது என்றும், அக்கடிதத்தில் மதுரை மாநகராட்சி தவிர, பிற மாநகராட்சிகளில் ஒப்பந்ததாரர் பதிவு இல்லாமல் பணிகள் ஏதும் மேற்கொள்ளபட்டிருப்பின், அதற்கான வேலை உத்திரவு, பட்டியல் பெறப்பட்ட விபரம்

மற்றும் இதர விபரங்கள் ஆகியவற்றை கடிதம் கிடைக்கப்பெற்ற ஏழு தினங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது என்றும், ஆனால் அன்னார் இது நாள் வரை அவர் குறிப்பிட்டவாறு மேற்படி விபரத்தினை அலுவலகத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றும், மேலும் அன்னாரை நேரில் அழைத்து ஒப்பந்தவிதிகள் குறித்தும், மாநகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்து பணிகளை மேற்கொள்ளுமாறும் பலமுறை தன்னால் நேரில் அறிவுறுத்தப்பட்டது என்றும், இருப்பினும் திரு. அரவிந்த் பாலாஜி, தான் அளித்த விளக்கங்களை முழுமையாக ஏற்காமலும் புரிந்துகொள்ளாமலும் செயல்பட்டு வருகிறார் என்றும், மேலும் ஒப்பந்தப்புள்ளிகளை விதிகளை மீறி பொறியியல் பிரிவில் பல்வேறு பணிகளுக்கு முறையற்ற முறையில் ஒப்பந்தப்புள்ளிகளை அளித்து வருவதோடு தன் மீது தொடர்ந்து பொய் புகார்களையும் அளித்த வண்ணம் உள்ளார் என்றும், திரு. அரவிந்த் பாலாஜி தெரிவிக்கும் பொய் புகார்களில் எவ்வித உண்மைத் தன்மையுமில்லை என தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில், முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை, வாக்குமூலம், மாநகராட்சி நகர பொறியாளர் அறிக்கை ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. இந்நிலையில் மனுதாரர் தனது முறையீட்டில் உள்ள குற்றச்சாட்டு குறித்து எவ்வித ஆதாரமும் சமர்ப்பிக்கவில்லை. மேலும், மனுதாரருக்கு மாநகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்துகொண்டு, நடைபெறும் டெண்டர்களில் கலந்துகொள்ள அறிவுறுத்தியும், மனுதாரர் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமலும், பதில் ஏதும் அனுப்பாமலும் செயல்பட்டுள்ளார் என்பது மனுதாரரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கை வாயிலாக உறுதியாகிறது. இந்நிலையில், மாநகராட்சி நகரப் பொறியாளரின் அறிக்கை ஏற்கப்பட்டு இம்மனு தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2020-ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 03-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

Tamil Nadu State Local Bodies Ombudsman Chennai-600 032

20/3/2020

செயலாளருக்காக

பெறுநர்

(1) திரு. M. அரவிந்த் பாலாஜி,
சுந்தர ராஜபுரம்,
புதிய ரைஸ் மில் ரோடு, 2வது தெரு,
மதுரை – 625 011.

20/3/2020

(2) திரு. S. அரசு,
நகரப் பொறியாளர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை - 625 002.

(3) ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை - 625 002.

நகல்
முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு **3**
**இ. கோ. / உதரி**